முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

21.11.2024

1. வந்தேன் என்று உடன் அருளும்
வடிவேலனார் பெருந்துணை கொண்ட
எந்தன் பிரணவக் குடில் தன்னில்
எல்லா மக்களும் வந்து வணங்கிட

2. வணங்கிட எல்லாம் கை கூடுமென
வாழ்த்தியே ஆறுமுக அரங்கனும்
வணங்கிடும் உலக மக்களுக்காய்
வழங்குவேன் குருவார அருளாசி

3. அருளாசி குரோதி தேள் திங்களில்
அறிவிப்பேன் சஷ்டி பூசமிணைந்த
வரமென முதல் குருவார ஆசி
வழங்குவேன் உலகோர் நலம் வேண்டி

4. வேண்டியே பிரணவக் குடிலுக்கு
விடாது தொடர்ந்து வந்து
உண்டான சோதியை வணங்கி
ஊழகற்றும் அருளமுது உண்டு

5. உண்டபின் உண்மை மார்க்கமாம்
உயிர் காக்கும் உயர்நெறி
தண்டாயுதன் அருளிய சைவ நெறி
தவநெறியாய் ஏற்றுச் சரணாகதி

6. சரணாகதி கொண்டிட வேணும்
சத்திய தருமமாம் பிரணவக்குடிலின்
அரணான அன்னதான சேவையில்
அனைவரும் பொருளுதவி செய்து

7. செய்துமே புண்ணிய பலமெனும்
சேமிப்பை துவக்கி நாளும்
அய்யனே முருகா அரங்கா என
அனுதினமும் பாராயணம் கூறி

8. கூறியே ஞானிகள் பூசையை
குடிலில் அணுகிச் செய்வதுடன்
தெரிவிப்பேன் அவரவர் குடியிலும்
தினந்தோறும் பூசை நடந்திட

9. நடந்திட ஞானிகள் கூட்டம்
நல்கியே அவரவர் இல்லில்
இடர் வெல்ல வாசம் செய்து
இல்லிலே குருவருள் திருவருளாக

10. ஆகவே நல்துணை நிரம்ப
அனைத்துமே நற்பலன்களாகி
மிகைபட வளர்ச்சி மாற்றம்
மேலவர்கள் மெச்சும் தருமஞான

11. ஞானக்குடியுமாகி இனிதே
ஞானிகள் இறங்கித் தேர்வுதனை
தானாக அவரவரும் தேறிட அருளியே
தரணியையே ஞான உலகமாக்குவோம்

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–